முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மாலாங்கன் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.10.2018, சனிக்கிழமை

1. **யோக ஞானியே அரங்கா போற்றி**
   **உயர் தருமம் செய்து வருகின்ற**
   **யோக ராசனே அரங்கா போற்றி**
   **உலகமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குவலயத்தில் **விளம்பி துலை திங்கள்**
   **தெரியவே சூலதிகதி காரி வாரம்**
   **(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 3ம் நாள் 20.10.2018, சனிக்கிழமை)**
   **தேசிகனுக்கு மாலாங்கன் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உயர்வான அன்னதான சேவையை
   ஞானம் கருதி செய்து வருகின்ற
   ஞானிகள் பூசை தோறும் கலந்து
4. கலந்துமே அரங்கன் வழிகளில்
   கலியுகத்தார் கலந்து தொடர்ந்து வர
   வளம் பெறுவதுடன் வாழும் காலமே
   வல்லமையும் சர்வசித்தியும் பெறுவர்
5. சித்திதரும் அரங்கனே முருகன்
   செயமருளும் ஓங்கார ஆசானாக
   உத்தமமாய் சேவை ஆற்றும்
   ஓங்காரன் கொள்கை உயிர்காக்கும் கொள்கை
6. கொள்கை வழி கூடிடும் மக்களே
   குவலயம்தனில் உயர் பதவியும்
   ஆளுமை திடம் அதியோகமும்
   அகத்தியர் முதலான அனைத்து சித்தர்களின்
7. சித்தர்களின் ஆசியும் பலமும்
   சிறப்பான தகுதியும் அடைவர்
   சத்திய ஞான சபை கொண்ட
   சரவண ஜோதி பலம் கொண்ட
8. கொண்டநல் அய்யன் அரங்கன்
   குடில் வாழும் தொண்டர்களுக்கு
   உண்டாகும் பெரும் பாதுகாப்பு
   உலகமெங்கும் சென்று வருகின்ற
9. வருகின்ற பலமும் திடமும்
   வரங்களும் கிட்டி சிறப்பர்
   முருகா எனும் செபதபமே
   மூவுலகும் ஆளுமை புரிந்து

10. புரிந்துமே பிரளயம் இல்லாத
பெரும் பாதுகாப்பு மிக்க உலகமாக
தரணியே சிறந்து விளங்கும்
தன்னார்வ தொண்டுமிக்க அடியவர்கள்

11. அடியவர்களாக அரங்கன் சீடர்கள்
அகிலமெங்கிலும் பரவி நின்று
நாடிடும் ஞான யுகம் மாற்றம்
நாட்டிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

### மகான் மாலாங்கன் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

அநேகம் அநேகம் யோகங்களை செய்து யோகத்தில் வெற்றி பெற்று ஞானியாக வந்துதித்த யோக ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே போற்றி! போற்றி!! எல்லையில்லாது உயர்வான தர்மங்களை செய்து வருகின்ற யோகராசனே வள்ளல் ஞானியே அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி. அற்புதமான ஆற்றலும் பெருமைகளையும் உடைய அரங்கமகா தேசிகனாரே உம்மைப் போற்றி, உலகமெலாம் உமது புகழ் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 3ம் நாள் 20.10.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மாலாங்கன் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மாலாங்கன்.

எல்லா வளங்களையும், யோகமும் ஞானமும் தந்தருளும் வல்லமைமிக்க உயர்வான அன்னதான சேவையை உலக மக்கள் ஞானம் அடைந்திட வேண்டுமென்ற தாயுள்ளத்தோடு தொடர்ந்து செய்து வருகின்ற மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக நலம் கருதி செய்கின்ற ஞானிகள் பூஜைதோறும் மக்களெல்லாம் கலந்து கொண்டு, அரங்கன் உபதேசிக்கும் தூய ஞானநெறிக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, அரங்கனின் கொள்கைகளின் வழி நடந்து, அரங்கனை பின் தொடர்ந்து வரவர, அவரெல்லாம் சர்வவளம் பெறுவார்கள், சகல வல்லமைகளையும் பெறுவதோடு சர்வசித்திகளையும் கண்டடைவார்கள்.

சகல சித்திகளையும் தந்தருளும் அரங்கனே இவ்வுலகினில் முருகப்பெருமான் ஆவார். அரங்கனும் முருகப்பெருமானும் வேறல்ல ஒன்றே, ஒன்றாகிய அரங்கன் தம்மை நம்பி வந்தோர்க்கு, தம்மை குருவாய் ஏற்று பின்தொடர்வோர்க்கு வெற்றிகளைத் தந்தருளும் ஓங்காரக்குடில் ஆசானாக வெளிப்பட்டு அற்புதமாய் உத்தம சேவைகளை உலகிற்காக தன்னலமற்று செய்து வருகின்றார்.

உத்தமமாய் சேவைகளை செய்து வருகின்ற ஓங்காரன் அரங்கனின் கொள்கைகள் முருகப்பெருமானின் கொள்கைகளாகும். அரங்கனின் கொள்கைகள் அனைத்தும் உயிர்காக்கும் கொள்கைகளாகும்.

அரங்கனின் கொள்கைகளைப் பின்பற்றி நடந்து, தேறும் மக்களே உலகினில் உயர்பதவிகளையும் திடமான ஆட்சியையும், அதியோகமும் பெறுவதோடு நவகோடி சித்தர்களின் தலைவரான அகத்தியப் பெருமானின் ஆசியையும் நவகோடி சித்தர் பெருமக்களின் ஆசிகளையும், பலத்தினையும் பெற்று சிறப்பான தகுதியையும் அடைந்திடுவார்கள்.

உண்மை ஆன்மீகம் வெளிப்படுகின்ற சத்திய ஞானசபைதனை கொண்டிட்ட அரங்கன் சரவணஜோதி பலம் கொண்ட அய்யன் அரங்கமகா தேசிகனார் வாழும் ஓங்காரக்குடிலினை சார்ந்து வாழும் தொண்டர்களுக்கு ஞானிகளின் பெரும் பாதுகாப்பு உண்டாகிடும். உலகமெங்கும் சென்று வருகின்ற பலமும் திடமும் கிடைத்து வரங்களையும் பெற்று சிறப்படைவார்கள்.

முருகா, முருகா, முருகா என தொடர்ந்து சொல்லுகின்ற ஜெபதபங்களே மூவுலகையும் ஆட்சி புரியும். பிரளயம் என்கிற இயற்கை பேரிடர், பிரளயம் இல்லாத பெரும் பாதுகாப்புமிக்க அருள் உலகமாக சிறந்து விளங்கிடும்.

தன்னார்வ தொண்டுள்ளம்மிக்க அடியவர்கள், அரங்கனின் சீடர்கள், அடியவர்களாக உலகமெங்கும் பரவி நின்று துன்பம்மிக்க கலியுகம் மாற்றி ஞானயுகமாக மாற்றிடுவர் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மாலாங்கன்.

–சுபம்–